# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.

**O.S No.89/2018** **Date:29.11.2023**
**(P.W– 1)**

திரு.மணியரசி த/பெ.பாலகிருஷ்ணன்.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**:

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்துக்கு எந்த ஆண்டு வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்றால், 2009 ல் பார்த்தேன். மேற்படி வில்லங்கம் போட்டுப் பார்த்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. ஏற்கனவே சொத்தை விற்றுவிட்டததால், வில்லங்கம் பார்க்கவில்லை என்றும், அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்துக்கு பட்டா சிட்டா ஆகியவை 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால், ஞாபகம் இல்லை. அப்பா பெயரில் தாவா சொத்திற்கு பட்டா இருந்ததை 1996 க்கு பிறகு நான் பார்க்கவில்லை என்றால், சரிதான். அவர் பெயரில் இருக்கும் என்று நம்பிக்கையில் இருந்தோம். தாவா சொத்துக்கு வரிகட்டவோ, கந்தாயம் வரி செலுத்தவோ ஒரு நாளும் நாங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால், என் அக்கா வீட்டுக்காரர் செலுத்தியுள்ளதாக சொன்னார். அக்கா வீட்டுக்காரர் வரி செலுத்திவிட்டாரா என்று தெரிந்து கொண்டேனா என்று கேட்டால், செலுத்தியிருப்பார் என்று நம்பிக்கையில் இருதேன்.

2. தற்போது 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவித்தில் இருப்பதை நான் சென்று பார்த்தேனா என்று கேட்டால், அவர்கள் அனுபவத்தில் இருக்க வாய்பில்லை. நான் சென்று பார்த்துவருகிறேன். 15.07.1996 கிரையத்திற்குபிறகு முருகேஷ் அனுபவத்தில் இருந்தும், 06.02.2004 கிரையத்திற்கு பிறகு 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. கிரையப்பத்திரத்தின் முதல் தாழின் பின் பக்கம் கைரேகை வாங்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால், வாங்குவார்கள் என்று நினைக்கிறேன். 15.07.1996 தேதியில் என் அப்பா எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தில் கைரேகை வாங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 15.07.1996 பத்திரத்தில் முதல் தாழின் பின் பக்கத்தில் உள்ள கைரேகை பதிவுஅலுவலகத்தில் தான்

வாங்குவார்கள் என்றும், அந்த ரேகையை தான் என் அப்பா உயிரோடு இருக்கும் போது கைரேகை நிபுணருக்கு அனுப்பினார்கள் என்று சொன்னால், சரிதான். மேற்படி கைரேகையுடன் என் அப்பாவை நீதிமன்றத்திற்கு வரவைத்து எடுத்த ரேகையை தான் ஒப்பிட்டுப் பார்த்தார்கள் என்று சொன்னால், சரிதான். மேற்படி இரண்டு ரேகையும் ஒத்து போகிறது என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால், அந்த இரண்டு ரேகையும் ஒன்று என்பது எங்களுக்கே தெரியும்.

3. ஆனால், பதிவு அலுவலகத்தில் உள்ள கைரேகை பதிவேட்டை தான் கைரேகை நிபுணருக்கு அனுப்புவதற்கு கேட்டிருந்தோம். அதனை அனுப்பவில்லை. முதல் முறை என் தகப்பனார் தான் கைரேகை ஒப்பிடு செய்ய மனுதாக்கல் செய்தார் என்றால், சரிதான். நீதிமன்ற உத்தரவின் படி தான் என் அப்பா கைரேகையை அனுப்பினார் என்றும், மேல் முறையீடு செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. தற்போது நான் மீண்டும் ரேகையை ஒப்பிட தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த உத்தரவின் மீதும் மேல்முறையீடு செய்யவில்லை என்றால், வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். ஆள் மாறாட்டம் செய்துவிட்டதாக தற்போது சொத்தின் விலை ஏற்றத்தின் காரணமாக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

4. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். பொய்யாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கொடுத்த அறிவிப்பிற்கு பிரதவாதிகள் கொடுத்த பதில் அறிவிப்பில் கிரைய்ம ஏற்பட்ட விவரம் சொல்லப்பட்ட நிலையில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பதால், வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால், சரியல்ல. 1994 ல் திருநெல்வேலி மாவட்டத்தில் குடியிருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆவணம் உள்ளது, ஆனால், தாக்கல் செய்யவில்லை. முறைப்படி தான் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி மற்றும் 1ம் வாதியிடமிருந்து சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால், சரியல்ல.

5. 15.07.1996 கிரையம் நடைமுறைப்பட்டுத்தப்ட்டுள்ளது என்றால், சரியல்ல. அதன் பின்னிட்டு 8 வருடம் கழித்து தான் 06.02.2004 தேதியில் 3 ம் பிரதிவாதி 2 பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றம், அந்த கிரைய ஆவணமும் நடைமுறைப்பட்டுத்தப்ட்டுள்ளது என்று

சொன்னால், சரியல்ல. பதிவு செய்து கொடுத்த கிரைய ஆவணத்தின் விவரத்திற்கு எதிராகநான் வழக்காட முடியாது என்றால், சரியல்ல. என் அக்கா கணவர் 1ம் பிரதிவாதியை என் அப்பா பாதுகாவலராக நியமித்துள்ளார் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்றால், இல்லை. வாய்மொழியாக தான் சொல்லியிருந்தோம். 1ம் பிரதிவாதி என்ன தொழில் செய்து வந்தார் என்பதற்கும், என்ன நஷ்டம் ஏற்பட்டது என்பதற்கும் ஆவணம் இல்லை என்றால், சரிதான். 1996 காலகட்டத்தில் என் அப்பாவுக்கு வருமானம் இருந்ததா என்றால், ஏ.சி.சி சிமெண்ட் பேக்டரியில் பணி செய்து வந்தார்.

6. மேற்கண்ட சிமெண்ட் நிறுவணத்தில் எத்தனை ஆண்டுகளா பணிபுரிந்தார் என்றால், 40. 50 வருடமாக இருந்தார். மேற்படி நிறுவணத்தில் அரசு அதிகாரிகளுக்க உள்ள சலுகைகள் போல் என் அப்பாவுக்கும் உள்ளது என்று சொன்னால், பணி ஓய்வு மற்றும் ஓய்வு ஊதியம் பலன்கள் உண்டு. மேற்படி என் அப்பா பணிபுரிந்த நிறுவணத்தில் ஓய்வு ஊதிய பலன்களில் லோன் போட முடியும் என்றால், தெரியாது. என் அப்பாவுக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால், 2000 முதல் 3000 வரை இருக்கும். என் அப்பா எந்த பொருப்பில் பணி செய்தார் என்றால் வெல்டராக இருந்தார். என் அப்பா 1996 காலகட்டத்தில் 1ம் வாதியின் அனைத்து மகன்கள் மற்றும் மகள்கள் நல்ல உறவுமுறையில் இருந்தார்கள்என்றால், சரிதான்.

7. என் அப்பா தெளிவான ஒப்புதலுடனும், விருப்பப்பட்டு 15.07.1996 கிரையப் பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால், சரியல்ல. நான் சொத்து மதிப்பு ஏறிவிட்டதால் ஏற்கனவே விற்ற சொத்தை அபகரிக்க வேண்டியும், ஆள்மாறட்டம் செய்துவிட்டதாகவும், மோசடி செய்துவிட்டதாக சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் தற்போது தாவா சொத்து சுவாதினத்தில் இல்லை என்றும், சுவாதினப் பரிகாரம் கோராததால் இந்த வழக்கு நிலைக்காது என்றால், சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.